**ஹட்டன் திக்ஓயா நகர சபை - 2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹட்டன் திக்ஓயா நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானச் செலவினக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹட்டன் திக்ஓயா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.2(அ) ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபை தொடர்பாக 08 வழக்குகள் காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது இது தொடர்பான விபரங்கள் அட்டவணைகள் மூலம் அறிவிப்பதாக | வழக்குகள் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,322,557 ஆன் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படா திருந்ததுடன் தீர்வு செய்யப்பட்டிருந்த நிர்மான கடன் கொடுத்தோர் ரூபா 353,462 ஆன மீதி தொடர்ந்தும் கடன் கொடுத்ததாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் சீராக்கம் செய்வதாக | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 2,097,066 ஆன நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் சீராக்கம் செய்வதாக | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரும் ரூபா 122,643 ஆன 4 முற்கொடுப்பனவு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (ஈ) | ரூபா 446,012 ஆன 05 வாகனங்களும் நூலகங்களில் காணப்பட்ட விலை குறிப்பிடப்படாத 3962 புத்தகங்களும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்கில் சீராக்கம் செய்வதாக | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 02 நடைமுறைகள் சொத்துக்கள் மீதிகளுக்குரிய அட்டவணைகளில் மீதிகளின் கூட்டுத்தொகையுடன் ஒப்பிடும்போது ரூபா 11,001,111 ஆன இணக்கமின்மை காணப்பட்டது | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 45,919,014 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் சொத்து பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கபடாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது | இதில் குறிப்பிடப்பட்டு 05 சொத்துக்களுக்கு உரியதாக ரூபா 38,875,754 ஆன மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் பொருட் பதிவேட்டு புத்தக பதிவுகள் மாத்திரம் உள்ளதாக குறைபாடுகள் தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளதாக | அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரத்தின்) 157 (7) (ஏ) பிரகாரம் | அறிவித்தல் பதாதைகளுக்காக உப உறுப்புரை பிறக்கப்பட்டிருக்கவில்லை | சுட்டி காட்டப்பட்ட குறைபாடுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i | நி.பி 371 | 1987 முதல் 2021 | முற்பணத்தை | முற்பணங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையான காலப் பகுதியில் காணப்படும் ரூபா 607,541 ஆன 47 முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | தேடிப்பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்வு செய்வதற்கு் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii | நிதிப்பிரமாணம் 571(3) | 2015 ஜனவரி 01 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றதிணைக்களத்திடம் இருந்து மெதரட உள்ளூராட்சி மன்ற கிராம விழாவில் விருதாக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 176,697 ஆன தொகையை பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் தவறுகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய மம/உ_ஆ/ 2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | 434 கடைகளுக்கு உரிய கடை வாடகை 2006 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை | மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதாக | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,565,879 ஆக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,292,731 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையினால் பராமரிக்கப்படும் நடைமுறைக் கணக்கொன்றில் மீளாய்வாண்டில் ரூபா 51,765,961 மற்றும் முதல் ரூபா 43,512,790 வரையான மீதியொன்று வைத்திருந்த போதிலும் மிகைப்பணத்தை பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவில்லை. | மிகைப்பணத்தை ஹட்டன் இலங்கை வங்கியில் சுவிடஜ்ட் கணக்கு முறைமையின் கீழ் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக | மிகைப் பணத்தை பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 17,600,000 | 19,310,897 | 16,615,917 | 18,558,706 | 19,100,000 | 19,151,893 | 17,812,098 | 15,863,725 |
| (ii) | வாடகை | 29,195,000 | 14,247,236 | 16,357,087 | 9,576,962 | 29,245,000 | 14,393,678 | 16,014,677 | 11,686,813 |
| (iii) | அனுமதிப்பத் திரககட்டணங்கள் | 3,600,000 | 819,207 | 819,207 | - | 3,700,000 | 2,192,455 | 2,808,205 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 127,184,000 | 10,648,290 | 8,378,563 | 12,864,349 | 125,683,000 | - | 83,990,703 | 10,594,622 |
| | | 177,579,000 | 45,025,630 | 42,170,774 | 41,000,016 | 177,728,000 | 35,738,026 | 120,625,683 | 38,145,160 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 3,048,790 ஆன காணி வரி நிலுவையொன்று காணப்பட்டதுடன் அதில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 1,429,396 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 1,280,325 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை உடனடியாக கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்யுமாறு குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| ii | அரசின் ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 3,332,979 ஆக இருந்ததுடன்அதில் பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து ரூபா 2,357,414 அதாவது மொத்த நிலுவையில் 71 சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **வாடகை**<br>------------ | | |
| i | குறைந்த வாடகை வீடுகளிலிருந்து 12 ஆண்டு காலமாக இருந்து வரும் ரூபா 218,019 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 140,712 தொகையை அறவிடுவதற்காக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக செய்து அதனை குத்தகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| ii. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,581,710 ஆன வாடி வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம்<br>------------------------------------ | | |
| i | வாகன நிறுத்துமிடங்களில் இருந்து கட்டண அறவீடு உடன்படிக்கை பிரகாரம் கேள்விதாரர்களிடமிருந்து ஒரு வாரத்திற்கு 68,280 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை ரூபா 1,677,475 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| ii | மீளாய்வாண்டின் விளம்பர அறிவித்தல் பதாதை கணிப்பீடு செய்யப்படாமல் அறிவித்தல் பதாதை காட்சிப்படுத்துவதற்கு வேண்டுகோள் விடுத்த நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் பட்டியல்களை அனுப்பி ரூபா 235,800 தொகை அறவிடப்பட்டிருந்த போதும் 2022 ஒக்தோபர் 18 ஆந் திகதி கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்திய 36 பதாதைகளுக்கான கட்டணங்கள் அறவிடப்படாமை காரணமாக ரூபா 901,200 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது விளம்பர பதாதை தொடர்பான கணிப்பீட்டின் போது பரிசோதனைகளை முறையாக மேற்கொண்டு வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணிப்பீட்டினை மேற்கொண்டு வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை க்கட்டணம்<br>---------------------------------------------- | | |
| | மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 979,489 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,884,860 ஆக இருந்தது. | இத்தவறை திரண்ட நிதியத்திலிருந்து 2023 இன் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் சட்டத்தின் (255 ஆவது அதிகாரத்தின) 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாரச்சந்தை எந்தவொரு பராமரிப்பின்றியும் சுத்திகரிக்கப் படாமலும் நோக்கங்கள் மற்றம் செயற்பாடுகளுக்கு புறம்பான 37 இடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் அக் குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 135,817 குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | வாரச்சந்தையில் வெளித்தரப்பினருக்காக திறந்து காணப்படுவதுடன் அது தொடர்பில் பொதுமக்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். எதிர் காலத்தில் குறித்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையாக பராமரித்து நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும் |
| (ஆ) மத்திய வர்த்தகசந்தை யில் 32 கடைகள் மூடப்பட்டு இருந்ததுடன் குத்தகையாளர்களால் கடை களுக்கும் மற்றும் கட்டிடங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்ட இருந்தமை அவதானிக்கப்பட்டது காற்று மற்றும் வெளிச்சம் கடைகளுக்குள் வருவதற்கு பொறியியலாளர் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட இந்த துவாரங்கள் (நடு விராந்தை) மூடப்பட்டிருந்தது அதன் காரணமாக குறித்த வியாபார சந்தையின் படைத்தவர்களின் கீழ் மாடி முழுமையாக இருட்டு அடைந்து காணப்பட்டது | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சந்தையை திருத்தம் செய்து முறையான முகாமைத்துவத் துடன் பராமரித்து செல்லல் வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 நவம்பர் 01 ஆம் திகதியின் பின்னர் சபையால் அது அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரி ரூபா 1,099,722 தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்காமல் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது | | தகவல்களை தேடி ஆராய்ந்து குறித்த பணத்தை இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 ஆண்டுகள் | நீண்ட காலமாக இருந்து வரும் | பெற வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 13 ஆண்டுகள் வரையான காலவீச்சொன்று கடந்திருந்த ரூபா 9,985,139 ஆன 03 கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு துடன் நடவடிக்கை எடுக்கப்படாத இருந்ததுடன் 03 முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்த ரூபா 4,416,477 ஆன 02 கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | மீதிகளை ஆராய்ந்து தீர்வு செய்வதாக . | மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு உரிய அரசின் இரண்டு வீடுகளில் இருந்து முன்னைய ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை குடியிருந்த காலப்பகுதிக்காக ரூபா 121,057 ஆன வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வீட்டு வாடகையை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டு வந்ததுடன் அதில் 04 வாகனங்கள் திருத்தம் செய்யும் நிலையில் காணப்பட்டன அவாகனங்களுக்காக பெற்றுக்கொண்ட ரூபா 414,548 ஆன டயர் டியூப் மற்றும் உதிரிபாகங்கள் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன. | அவ் வாகனங்களின் உதிரிபாகங்களை சபையின் ஏனைய வாகனங்களில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக | உதிரிபாகங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹட்டன் நகரின் மத்தியில் அமைந்துள்ள பெரிய மண்டபம் ஒன்று சமையலறை ஒன்று மற்றும் மலசலகூட முறைமை ஒன்றுடன் கூடிய விழா மண்டபம் மற்றும் ஹட்டன் திக்ஓயா வாசிப்பு மண்டபம் மற்றும் நூலகக் கட்டிடங்கள் திருத்தம் செய்யப்படாமலும் பராமரிப்பின்றியும் 3,000 புத்தகங்களுடன் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இக்கட்டிடங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தி பராமரிக்கப்பட வேண்டும் |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,292,061 செலவில் பிஹிலிஹதர அல்ல கட்டம் I மற்றும் II தடுப்புச் சுவர் நிர்மாண வேலையின் போது வாய்க்காலின் வண்டல் மண்ணை இயந்திரத்தின் மூலம் அகற்றப்பட்டிருந்த | செயற்திட்டத்திற்கான Hammer Test அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மதிப்பீடு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

போதும் கையால் அகற்றப்பட்டதாக (Manual) ரூபா என்பது 80,685 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு சுபா 13,230 ஆன நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22 பதவிகளில் 76 வெற்றிடங்கள் காணப்பட்டன சுகாதார தொழிலாளி பதவி காணப்பட்ட 42 சதவீத வெற்றிடங்கள் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்துவது தொடர்பில் அடிப்படையாக தாக்கமளித்திருந்ததுடன் வருமான இரண்டு வருமான பரிசோகர்கள், சபை செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் வெற்றிடங்களாக இருப்பது காரணமாக வருமான சேகரிப்பு மற்றும் உள்ள கட்டுப்பாடு முறைமையை முறையாக பேணி செல்வதில் சிக்கல் ஒன்று காணப்பட்டது | காணப்படும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |

**4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக செயலாற்றுகை திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்படு தாக | செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தீபாவளி விழா சமயத்தில் பிறை சதுக்கத்தினை அண்மித்ததாக மற்றும் சக்தி மண்டபத்துக்கு அண்மையில் தற்காலிகமாக 140 கடைகள் அமைத்து பிரதேசத்தில் மிகவும் அசுத்தமான நிலையில் காணப்பட்டதுடன் அசுத்தமான கழிவுப் பொருட்கள் நிறைந்து நீர் | எதிர்காலத்தில் இத் தவறுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதுடன் பொருத்தமான வகையில் கடைகளை அமைத்தல் வேண்டும் |

முறையாக வழிந்தோடாமல் மற்றும் நிரந்தர வியாபார கடைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் பூமி அமைக்கப்பட்டிருந்தது

**4.3 நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |